DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**C.C.No. 2/2022**

**அ.சா.– 4**

| | |
|---|---|
| பெயர் : திரு. மணி | கிராமம்: பள்ளிப்பட்டி |
| த/பெ. : திரு. குப்புசாமி | தாலூக்கா : பாப்பிரெட்டிப்பட்டி |
| வயது : 52 | தொழில்: சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 4th day of March, 2025.

( எதிரிகள் ஆஜர் மற்றும் எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் தற்பொழுது தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் தீவட்டிப்பட்டி காவல்நிலையத்தில் 05.04.2017 ம் தேதியில் தலைமை காவலராக பணியிலிருந்தபொழுது ஓமலூர் அரசு மருத்துவமனையிலிருந்து சுமதி என்பவரின் Intimation கிடைக்கப்பெற்று, 05.04.2017 ம் தேதி காலை 5 மணிக்கு ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சேகர் மனைவி சுமதி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த சுமதி என்பவரின் புகார் வாக்குமூலத்தை தீவட்டிப்பட்டி காவல்நிலையம் வந்து உதவி ஆய்வாளர் திரு. முருகன் என்பவரிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)**:–

சுமதி என்பவர் சம்பவத்திற்கு பிறகு காவல்நிலையம் வந்து புகார் கொடுத்திருக்கும்பட்சத்தில் நான் புகார் வாக்குமூலம் பதிவுசெய்யவேண்டிய

அவசியம் இருந்திருக்காது. நான் பதிவு செய்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார் வாக்குமூலத்தில் 2 வது பக்கத்தில் முதலாவது மற்றும் 2 வது வரிகளில் திருப்பதி மற்றும் கௌதமன், அம்மாசி ஆகிய மூவரும் சேர்ந்துகொண்டு என்ற வாசகம் உள்ளது. சுமதி என்பவர் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக இருந்தார் என்பது பற்றி என்னிடம் சொல்லவில்லை. நான் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றபொழுது சுமதி மற்றும் அவரது மகன் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றனர். நான் சுமதியின் மகனை விசாரிக்கவில்லை. சுமதி சொன்ன புகார் வாக்குமூலத்தில் தன் மகனுக்கும் காயங்கள் ஏற்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவருவதாக என்னிடம் சொன்னார். புகார் வாக்குமூலத்தில் குறிப்பாக உள்நோயாளியாக தன்மகன் சிகிச்சை பெற்றதாக சொல்லவில்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.